செ.வெ.எண் : 01/ஏப்ரல் நாள்:01.04.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## நகராட்சி நிர்வாகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை ஒருங்கிணைந்து மேற்கொண்ட கிருமி நாசினி தெளிக்கும் பணி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

இராமநாதபுரம் நகராட்சி, கேணிக்கரை பகுதியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் தீயணைப்பு மீட்பு பணிகள் துறை ஒருங்கிணைந்து கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொது இடங்களில் கிருமி நாசினி தெளிக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.04.2020) நேரில் சென்று பார்வையிட்டார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெளிநாடுகளில் இருந்து இதுவரை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 4,125 நபர்கள் திரும்பியுள்ளனர். அவர்களில் **1,428** நபர்கள் 30 நாட்கள் தனிமைப்படுத்துதல் காலம் முடிவடைந்து கொரோனா அறிகுறி ஏதும் இல்லாளமல் நலமுடன் உள்ளனர். மீதமுள்ள **2,697** நபர்கள் தற்போது அவரவர் குடும்பத்தாருடன் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களின் வீடுகளில் மாவட்ட நிர்வாகம் மூலம் ஸ்டிக்கர் ஒட்டி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வந்து ஊர் திரும்ப முடியாத 174 வெளிமாநில பக்தர்கள்/சுற்றுலா பயணிகள், 1044 வெளிமாநில தொழிலாளர்கள், ஆதரவற்ற நிலையில் உள்ள 354 நபர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். அதேபோல, வெளி மாநிலங்களிலிருந்து 761 நபர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு திரும்பியுள்ளனர். இவர்கள் அனைவரும் ஆங்காங்கே உள்ள பொது கட்டடங்களில் தனிமைப்படுத்திட (Institutional Quarantine) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களுக்கு போதிய உணவு, குடிநீர், உடை, மருத்துவம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. டெல்லி நிஜாமுதினில் உள்ள தப்லிகி ஜமாத்தின் மர்காஸில் (மையம்) இந்த மாதம் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்ற தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த நபர்களுக்கு கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளதாக கவனத்திற்கு வரப்பெற்றுள்ளது. இந்த மாநாட்டில் நமது மாவட்டத்தைச் சேர்ந்த 33 நபர்கள் பங்கேற்றுள்ளனர்.

அதில் 17 நபர்கள் மட்டும் நமது மாவட்டத்திற்கு திரும்பியுள்ளனர். இவர்கள் அனைவரையும் உடனடியாக தனிமைப்படுத்தி கண்காணித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அவர்களது குடும்பத்தினரை அவரவர் வீட்டில் தனிமைப்படுத்தி கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்டுள்ள 17 நபர்களிடமிருந்தும் மாதிரி (Sample) எடுக்கப்பட்டு கொரோனா தொற்று பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதில் 2 நபர்கள் கொரோனா தொற்று அறிகுறிகளுடன் (Symptomatic) மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ள மாதிரிகளின் முடிவு வந்தவுடன் உறுதியான தகவல் அறிவிக்கப்படும். மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்குறிப்பிட்டுள்ள 17 நபர்களின் குடியிருப்புகளிலிருந்து 7 கி.மீ. சுற்றளவிற்குட்பட்ட அனைத்து வீடுகளிலும் பொது சுகாதாரத் துறையினர் மூலம் ஒவ்வொரு வீடாக நேரடியாகச் சென்று பரிசோதனை மற்றும் அறிகுறி கண்காணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது, மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் அலுவலர் திரு.அ.சாமிராஜ், இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் திரு.ந.விஸ்வநாதன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**